


**09. 02. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - ஷெசல்ஸ் நாடுகளுக்கிடையிலான நட்புறவு புதிய உச்சங்களை எட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2. எதிர்கட்சிகளின் தொடர் அமளியால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

3. நாட்டின் வாகன உற்பத்தி மையமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்..

4. தமிழ்நாட்டில் 214 கோடி ரூபாய் மதிப்பில் தூய்மை பணியாளர்களுக்கான உணவு விரிவாக்க திட்டம் இன்று தொடங்கப்பட்டது.

5. தமிழ்நாட்டில் தீயணைப்புத்துறை சார்பில் பாதுகாவலர்களுக்கான சிறப்பு ஒத்திகை பயிற்சி இன்று நடைபெற்றது.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர்

இந்தியா - ஷெசல்ஸ் நாடுகளுக்கிடையிலான நட்புறவு புதிய உச்சங்களை எட்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஷெசல்ஸ் அதிபர் டாக்டர் பேட்ரிக் ஹெர்மனியுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் உரையாற்றிய பிரதமர் இருநாடுகளுக்கிடையிலான கடல்சார் ஒத்துழைப்பு மற்றும் கலாச்சார பிணைப்புகளை எடுத்துரைத்தார்.

புவியியல் ரீதியிலாக மட்டுமல்லாமல் வரலாற்று ரீதியிலும் இருநாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்றார்.

எதிர்கால தொலைநோக்கு பார்வை மற்றும் பரஸ்பர நம்பிக்கையுடன் இருநாடுகளும் வளர்ச்சிபாதையில் முன்னேறி செல்லும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் கடல்சார் ஒத்துழைப்பு நாடாக செஷல்ஸ் திகழ்கிறது என்று கூறிய பிரதமர், நிலம், நீர், காற்றுக்கு அப்பாலும் இந்த ஒத்துழைப்பு முன்னெடுத்து செல்லப்படும் என்றார்.

இருநாடுகளுக்கு இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இன்று கையெழுத்தாயின.

முன்னதாக மாணாக்கரின் தேர்வு அழுத்தத்தை களையும் பரிக்சா பே சர்ச்சா 9ஆவது பதிப்பின் 2ஆவது கட்டமாக காணொலி வாயிலாக இன்று மாணாக்கருடன் கலந்துரையாடிய பிரதமர், தொழில்முனைவோர் பாதையை மாணாக்கர் தேர்ந்தெடுக்க அறிவுறுத்தினார்..

சிறிய அளவிலான ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் இதற்கு வழிவகுக்கும் என்றார்.

வாய்ஸ்

பாட புத்தகங்களுக்கு அப்பால் செயல்முறை நடவடிக்கைகளுக்கு மாணாக்கர் தங்களை உட்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஒழுக்கமும், உத்வேகமும் மாணாக்கருக்கு தேவை என்றார்.

அடிப்படை விதிகளை மாணாக்கர் பின்பற்றுவதன் மூலம் நாட்டின் கட்டமைப்பு மேலும் வலுப்பெறும் என்றார்.

உள்ளூர் பொருட்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர், இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருட்கள் நம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என்றார்.

நாட்டின் குடிமக்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் இந்தியாவை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லும் என்றும் குறிப்பிட்டார்.

பிரதமரின் உரையை கோவை புளியகுளம் PM Shri கேந்திரிய வித்யாலயா பள்ளியை சேர்ந்த மாணாக்கர் இன்று பார்வையிட்டனர்.

இப்பள்ளியை சேர்ந்த 10 மாணாக்கர் இதில் நேரடியாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

இதில் பங்கேற்ற மாணவிகள் தங்களது அனுபவங்களை எமது கோவை செய்தியாளரிடம் பகிர்ந்துகொண்டனர்.

வாய்ஸ்

**************

நாடாளுமன்றம்

எதிர்கட்சிகளின் தொடர் அமளியால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று கூடியதும் 19 வயதிற்குட்பட்டோருக்கான உலக கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணிக்கு அவை தலைவர் திரு.ஓம்.பிர்லா பாராட்டுக்களை தெரிவித்துக்கொண்டார்.

இந்திய அணியின் சாதனை எண்ணற்ற இளையோருக்கு தூண்டுகோளாக இருப்பதோடு, விளையாட்டு துறையில் சிறந்தவிளங்க உந்துசக்தியாக இருக்கும் என்றும் கூறினார்.

இதனை தொடர்ந்து கேள்வி நேரத்தை அவை தலைவர் எடுத்துக்கொள்ள முற்பட்டதோது காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மைய பகுதியில் குழுமி முழக்கங்களை எழுப்பின.

அமைதி காக்க அவைத்தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு உறுப்பினர்கள் செவி மடுக்காததால் அவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது அமளி தொடரவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணனும் உலக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

**************

கிரண் ரிஜிஜு

மக்களவை நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் கட்சி தொடர்ந்து இடையூறு விளைவிப்பதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்ல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் காங்கிரஸ் உறுப்பினர்களின் ஒழுங்கீனமான நடவடிக்கையால் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தை அவையில் எடுத்துக்கொள்ள முடியாமல் போனதாக குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு அவை தலைவரும் அத்ருப்தி வெளியிட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்ற வேண்டிய தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அவையில் உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பு கிடைக்காவிட்டால் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் காங்கிரஸ் கட்சியினரே பொறுப்பு என்றும் திரு.கிரண் ரஜிஜூ கூறியுள்ளார்.

**************

முதலமைச்சர்

நாட்டின் வாகன உற்பத்தி மையமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் பணப்பாக்கம் சிப்காட்டில் 470 ஏக்கரில் 9 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிலான அதி நவீன கார் உற்பத்தி ஆலையை, இன்று திறந்துவைத்து பேசிய அவர், தொழில் தொடங்க தமிழகம் உகந்த மாநிலமாக உள்ளது என்றார்.

தொழில் வளர்ச்சியில், உலக நாடுகளோடு, தமிழகம் போட்டியிடுவதாக கூறிய அவர், முதலீடுகள் செயல்பாட்டு மாநாடு விரைவில் நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக தூய்மை பணியாளர்களுக்கான உணவு விரிவாக்க திட்டத்தை முதலமைச்சர் திருவள்ளூர் மாவட்டம் போளிவாக்கத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

மாநிலம் முழுவதும் ஒரு லட்சத்து 29 ஆயிரம் தூய்மை பணியாளர்கள் பயன்பெறும் வகையில் 214 கோடி ரூபாய் மதிப்பில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதி முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் விரிவாக்க பணிகளை இன்று துவக்கிவைத்தார்.

தூய்மை பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

இதனை தொடர்ந்து பெரம்பலூர் மதுரை கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் அந்தந்த அமைச்சர்கள் தூய்மை பணியாளர்களுக்கான உணவு விரிவாக்க திட்டத்தை துவக்கிவைத்தனர்.

**************

தீயணைப்பு

தமிழ்நாட்டில் தீயணைப்புத்துறை சார்பில் பாதுகாவலர்களுக்கான சிறப்பு ஒத்திகை பயிற்சி இன்று நடைபெறுகிறது.

பெரம்பலூரில் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் பாதுகாவலர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சியை மாவட்ட அலுவலர் அனுஷியா இன்று தொடங்கிவைத்தார்.

தீயணைப்பு கருவிகளை கையாளுதல், தீவிபத்து நேரிட்டால் மாணாக்கரை பாதுகாப்பாக வெளியேற்றுதல் குறித்த பயிற்சிகள் இதில் இடம்பெற்றன.

இதேபோல் திண்டுக்கல்லில் மாவட்ட தீயணைப்பு மீட்பு பணிகள் அலுவலர் விவேகானந்தன் தலைமையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் நடைபெற்ற பயிற்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

அடுக்குமாடி குடியிருப்புகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், வணிகவளாகங்களில் பணிபுரியும் காவலர்கள் மேற்கொள்ள வேண்டிய முதலுதவி நடவடிக்கைகள் குறித்த பயிற்சிகள் இதில் இடம்பெற்றன.

திருப்பத்தூரிலும் இத்தகைய பயிற்சிகள் நடைபெற்றன.

**************

செய்முறை தேர்வு

தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கருக்கான செய்முறை தேர்வுகள் இன்று தொடங்குகின்றன.

பொதுத்தேர்வு அடுத்த மாதம் 2ஆம் தேதிமுதல் 26ஆம் தேதிவரை நடைபெற உள்ளது.

இத்தேர்வை 7 லட்சத்து 99 ஆயிரத்து 892 மாணாக்கரும்,

26 ஆயிரத்து 441 தனித்தேர்வர்களும் எழுத உள்ளனர்.

**************

இருவரி

நாகை மாவட்டத்தில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வெளிமாவட்ட நெல்-ஐ கொள்முதல் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் எச்சரித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள் தாட்கோ மூலம்

மானியத்துடன் கடனுதவி பெற அதன் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி கேட்டுக்கொண்டுள்ளார்.

**************

கால்நடை திருவிழா

சேலம் மாவட்டம் எடப்பாடி கொங்கனாபுரத்தில் பாரம்பரிய கால்நடைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைகக்கும் வகையில் கால்நடை திருவிழா நடைபெற்றது.

காங்கேயம், மயிலை, செவலை, காரி உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பாரம்பரிய வகை காளை மற்றும் சேவல் இனங்கள் இதில் பங்கேற்றன.

இதன்ஒருபகுதியாக நடைபெற்ற கண்காட்சியில் நாட்டுக்கோழி, சேவல் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதில் சேலம் நாமக்கல் ஈரோடு திருப்பூர் கோவை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து கால்நடை வளர்ப்போர் இதில் கலந்துகொண்டனர்..

**************

கோவில்

மயிலாடுதுறை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவிலில் தை செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு செல்வமுத்துக்குமார சுவாமி தேரோட்டம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் தேரை வடம்பிடித்து சுவாமி தரிசனம் செய்தனர்.

**************

கிரிக்கெட்

ICC உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா ஈடன் கார்டனில் ஸ்காட்லாந்துக்கு எதிராக 208 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இத்தாலி சற்றுமுன் 15 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 129 ரன் எடுத்திருந்தது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது